சர்வதேச **HIV/AIDS** தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டத்திலான கட்டுரைப்போட்டியில் முதலாமிடம் பெற்றுக்கொண்ட


உதயகுமார் அகிலன்,
மாணவன்
யா/ அளவெட்டி அருணோதயா கல்லூரி





# HIV நோயிலிருந்து எதிர்கால சமூகத்தை பாதுகாப்போம்

ஒரு காலத்தில் யாழ் மாவட்டம் கலாச்சாரத்தின் சின்னமாக விளங்கியது. இறுக்கமான கலாச்சாரப் பிண்னணியுடன் பண்பாட்டு விழுமியங்களுக்கும் பெயர் போன யாழ்மாவட்டம் இப்போது கம்பியூட்டர் வேகத்தில் மாறி வரும் கலாச்சாரச் சீரளிவுக்குள் சிக்கித் தவித்துக் தினறிக் கொண்டிருக்கின்றது.

மூன்று தசாப்தங்களாக நடை பெற்ற போர் ஓய்ந்து விட்ட நிலையில் போரின் எச்சங்களின் அடையாளங்களும் போர் விழுங்கிக் கொண்ட உறவுகளின் அழுகை ஒலிகளும் முட்கம்பி வேலிக்குள்ளும் நான்கு சுவர்களுக்கும் நசுங்கி வாழும் எம்மவர்களின் கண்ணீரும் கதறும் காற்றோடு கலந்து சோகங்களை பிளிந்து நெஞ்சங்களை குமுற வைத்துக் கொண்டிருக்கும் சம்பவங்களினால் மீட்சி பெற வழியின்றியிருக்கும் மக்கள் ஒரு புறமும், மறு புறத்தே மிகமிக வேகமாகப் பரவி வருகின்ற கலாச்சார சீரளிவுகளால் குடா நாட்டின் நிலை கவலைக்கிடமாக, உள்ளதுடன் சமூகச் சீரளிவுகள் தொற்று நோய் போலத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

மூன்று தசாப்தங்களக நடைபெற்ற போர் ஓய்ந்து விட்ட நிலையில் போரின் எச்சங்களின் அடையாளங்களும் போர் விழுங்கிக் கொண்ட உறவுகளின் அழுகை ஒலிகளும் முட்கம்பி வேலிக்குள்ளும் நான்கு சுவர்களுக்கும் நசுங்கி வாழும் எம்மவர்களின் கண்ணீரும் கதறனும் காற்றோடு கலந்து சோகங்களை

பிளிந்து நெஞ்சங்களை குமுறவைத்துக் கொண்டிருக்கும் சம்பவங்களினால் மிட்சி பெற வழியின்றியிருக்கும் மக்கள் ஒரு புறமும் மறு புறத்ததே மிமிக வேகமாகப் பரவி வருகின்ற சமூக கலாச்சார சீரளிவுகளால் குடா நாட்டின் நிலை கவலைக்கிடமாக உள்ளதுடன் சமூகச் சீரளிவுகள் தொற்று நோய் போலத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது -

போர் ஓய்ந்தும் A.9 பாதை தெறக்கப்பட்ட பின்னர் தான் குடாநாட்டில் மாறிவரும் சமூக சூழல் ஒன்று உருவாகி வருகின்றது - இத்தகைய சூழலை தடுத்து நிறுத்தி தீர்வொன்றினைக் காணாது விட்டால் குட்டி ஆபிரிக்க நாடொன்றாக யாழ்குடா நாடு மாற்றமடைவதுடன் எச்.ஐ.வி. யினை எதிர் கொள்ளக் கூடிய வாய்ப்பு உருவாகம் என்பதில் ஐயமில்லை.

குடாநாட்டுப் பத்திரிகைளில் வெளிவரும் செய்திகளின்படியும் ஊடகங்களின் தகவல்படியும் யாழ் நகரப் பகுதியை மையமாக வைத்து சினிமாப் பாணியிலான விபச்சாரம் தினம் தினம் நடந்தேறி வருவதாக நேரில் கண்டவர்கள் கூறுவதாக தகவல்கள் கிடைக்கின்றது – குடா நாட்டில் இப்போது விபச்சாரத் தொழில் கொடி கட்டிப் பறப்பதற்கு தற்போதைய சூழல் வாய்ப்பாக அமைந்துள்ளது – தினம் தினம் இங்கு முளை விட்டு தளிர் கொள்ளும் விபச்சார விபச்சார விடுதிகள் இத் தொழிலுக்கு திகி போடுவதாக உள்ளது. குடா நாட்டின் பல் வேறு இடங்களில் இருந்து வரும் தமிழ் பெண்களே தமது நாளாந்த வாழ்க்கைச் செலவுகளுக்காக தமது உடலையே விற்றுப் பிழைக்கும் இழிவான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவரும் அதேவேளை இப்படி வந்து போகும் பல பெண்களுக்கு குழந்தைகளும் இருக்கின்றனர் என்ற தகவல் நெஞ்சைப் பிழிகின்றது - இந்த வகையான விபச்சார நடவடிக்கைகள் மூலம் எச்.ஐ.வி என்கின்ற எயிட்ஸ் நோயானது தலை விரித்தாடப் போகின்றது என்பது உண்மையாகும்.

இதே நடவடிக்கைத் தொடரில் தென்னிலங்கையில் இருந்து வரும் சில பெண்களும் விபச்சார நடவடிக்கையில் ஈடபட்டு வருவதாக தெரிய வருகிறது. ஆதிகாரித்திச் செல்கின்ற போதைப் பொருட் பாவனையும் எந்த விதத் தடைகளில்லாத, நிலையும் இதற்கு துணை போகின்றது.

பனையோலை வெட்டி வெளியார் பார்க்காத உயரத்திற்கு வேலி அடைத்து, பெண் பிள்ளைகளை வளர்த்தெடுத்த எங்கள் தமிழ்ப்பபண்பாடு ‘‘கான்போன்’’ என்கின்ற கலாச்சார வெள்ளத்தில் மூழ்கி வருகின்றது

முழு உலகத்தையுமே சுற்றி வரக்கூடிய வசதிகளும் வாய்ப்புக்களும் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளுக்கு இருக்கின்றது, இணைய மூலம் அபாசப்படங்களைப் படங்களைப் பர்க்கின்ற வசதிகளும் இக்கையடக்கத் தொலைபேசிகளிடம் இருக்கின்றது, பாடசாலை மாணவர்களும் இஜவற்றினை தாராளமாகப் பாவித்து வருவதை அவதானிக்க முடிகின்றது, வீதிகள், கோயில்கள், குளங்கள் ஆட்களில்லாத இடங்கள் குச்சொலுங்கைகள் என கூடுகின்றவர்களின் கையடக்கத் தொலைபேசி உரையாடல்கள் எமது முழுச் சமுகத்தையுமே தலை குணிய வைக்குமி அளவிற்கு முன்னேறி வருகின்றது. அடங்கி, ஒடுங்கி இருந்த இளம் சந்ததியினர் இந்த கையடக்கத் தொலைபேசி மூலமும் தற்போதைய மாறிவரும் சூழலினாலும் தமது வாழ்வினை சீரழிக்கின்றனர் மிஸ் கோலில் தொடங்கும் நற்பானது நாளடைவில் காதலாகி, காமம் ஆகி பின் தியட்டர் லாட்சுகள் என்றும் சங்கமித்து ஒன்று கூடு காதலும் காமமும் மிஸ்சாகி அவள் மிஸிஸ் ஆக முன்பே கையிலே குழந்தையும், உடலிலே எயிட்சும் தோன்றும் அபாய எச்ரிக்கை யாழ் மாவட்டத்தில் புது வேகத்தில் காலான்கள் போல முளைத்து அபாசப்படங்களின் சீடிக்கள் தாராளமாக இங்கு கிடைக்கின்றதுடன், கையடக்கத் தொலைபேசிகளில் மிக இலகுவாகவே இக்காட்சிகள் இளம் சந்ததியினர் பர்வையிடக் கூடியதாக உள்ளது பாலியல் காட்சிகளைப் பார்த்து உணர்வுகள் தூண்ட அவர்களுக்கு ஒரு துணை அவசியம் தேவைப்படும் இவ்வாறு அவசரத்தேவைகள் நாளடைவில் பெருகி அது எயிட்சை எதிர்கொள்க்கூடிய வாய்ப்பை உருவாக்கி விடும் என்பதில் ஐயமில்லை மேலும் திடீர் மாற்றங்கள் உருவாக்கியதன் பலித விளைவு பிறந்த பாலியல் கலாச்சாரத்ரைத திணித்து விட்டதென்றால் தவறில்லை, எதிர் கொள்ளமுடியாத உணர்வுத்தடுமாற்’றம் இளம் சந்ததியினரை மிகவும் பாரதூரமாக பாதிக்காது இருக்கும் என்றால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றே கூற வேண்டும் எமது மக்கள் மத்தியில் கலாச்சார கட்டமைப்பு என்பது முற்று முழுதாகவே சிதைக்கப்பட்டு விட்ட ஒரு நிலை, விரும்பியோ விருப்பாமலோ வாங்கிக்கொண்ட பரிசாக உள்ளது - இத்துடன் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வும் அருகி விட்டது எயிட்ஸ் நோய் தொடர்பான அச் உணர்வும் குன்றி விட்டது , எயிட்ஸ் பற்றிய பதாதைகள் கூட ஒலி இழந்து விட்டன.

இதற்குக் காரணம் முன்பு இருந்த சூழ்நிலை. இத் போது மிகவும் இறுக்கமான கலாச்சாரக் கட்டமைப்பு காணப்பட்டது. இதனால் விழிப்புணர்வு பற்றி அதிகம் யோசிக்கவேண்டி ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

பரீட்சை அறை முறை பாடம் கற்கும் இடம் வரை பாலியலே செய்முறை சோதனை என்றும் காலமாகி விட்ட நிலை கல்வி குற்றிழந்து காவியாகி கற்றதற்குமாறாக ஒழுகும் கணவன்கள் அது தாண்டி பாலியல் தொழிற்சாலை போன்று வளம் பெற்று விட்ட தொழிற்துறை கருச்சிதைவுகள் நிறைந்து விட்டன. வல்லுறவுகள் பல காதல் என்னும் பெயரில் மாங்கனி என்னும் பஞ்சபாண்டவர்கள் போன்று மாறிவிட்டன.

அனேகமான காதலர்கள் கருத்தடை மாத்திறைகள் தட்டுப்பாட்டில் சட்டம் தூங்கும் நிலையில் கற்பை பறி கொடுத்த யுவதிகள் தீயில் விழுவதா? கண்ணீரில் வாழ்வதா? ஏன்கின்ற அவல வாழ்வில் இன்னும் பல படிகள் நகர்ந்து வேற்றுக்கிரக வாசிகள் விபச்சாரத்திற்கு வந்திறங்கிய காட்சிகள் போன்று ஆடைக் கலாச்ாரம் அது ஊடுருவி விட்ட உயிர்கொல்லியாகவேல மாறிவிட்டது. இந்த நிலையில் பேதை என்றால் எல்லாம் கிடைக்கும் தாராளம் அப்படிப்பட்ட தன்னிறைவு இங்கு உணர்வு இழந்து தண்ணியச்செலவாணியின் செழுமையுடன் அலையும் இளைஞர் கூட்டத்திற்கு அமிர்தம் வார்ப்பது போன்று அழகான பறவைக்கு அறிமுகம் வேண்டுமா என்றா தப்பான எண்ணத்தில் தப்பிக்க வழிகள் இருந்தும் மூழ்கின்ற நிலையில் பாலியல் நரகத்தில் அமுது என்ற விசம் பருகுவது போன்று எயிட்ஸ் நோயின் பிடியில் சிக்கி சீரழிந்து போகின்ற நிலைமையுடன் கூடிய சமூகச் சூழல் ஒன்றை யாழ் மாவட்டம் எதிர்கொண்டு வருகிது.

இது இவ்வாறு இருக்க தற்போதைய சூழ்நிலையில் பாதைகள் திறக்கப்பட்டு பயணங்கள் இலகுவாக்கப்பட்ட நிலையில் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான உறவுகள் யாழ் மாவட்டத்திற்கு வந்து போகின்றன் கடந்த இருபது முப்பது வருசங்களுக்கு மேலான இம் மண்ணிலே கால் பதித்தராதவர்களெல்லாம் வருகின்றனர், திருமணம் செய்கின்றனர் - இன்னும் என்னவெல்லாம் நடந்தேறுகின்றத இந்த மாற்றங்கள் கூட யாழ் மாவட்டத்தில் எச்.ஐ. வீயின் தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதில் ஐயமில்லை, காரணம் வெளிநாடுகளில் பாலியல் நடவடிக்கைகளெல்லாம் மிகவும் சர்வசாதாரணம் அத்துடன் பாலியல் நடவடிக்கைகளை அங்கீகரித்து விபச்சார விடுதிகளை நடாத்தவும் அனுமதி வழங்கி உள்ள நாடுகளிலும் எம்மவர்கள் ஆயிரக்கணக்கிலே உள்ளனர் அப்படியான விபச்சார விடுதிகளில் விபச்சரிகளிடம் வாங்கிய எயிட்சை இங்குள்ள ஏதுமறியாத அப்பாவிப் பெண்களிடம் விட்டுச் செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளது இது இவ்வாறு இருந்த பல வருடங்களாக இங்கு நடைபெற்ற யுத்தத்தை காரணம் காட்டி இந்தியா மற்றும் தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அகதிகளாக தங்கியிருந்தவர்களும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் யாழ் மாதவட்டம் நோக்கி வருகின்றனர். இந்தியா தமிழ் நாட்டில் பல மில்லியன் எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர் சிவப்பு விளக்கு பகுதி என்கின்ற விபச்சார விடுதிகள் பகிரங்கமாகவே இயங்கி வருகின்றது. ஆங்கு குளிர் காய்ந்தவர்கள் எங்கள் மண்ணிலே எச்.ஐ.வீயை கொட்டி விடப்போகின்றனர். இவையெல்லாம் கடுமையாக சிந்திக்க வேண்டிய விடயங்களாக வேண்டும்.

ஏயிட்ஸ் இன்று உலகில் மிகவும் அஞ்சப்படும் ஒரு கொடிய நோய் அது வந்தால் வாழ்வு கசங்கிவிட்டது கருகி விட்டது என்று தான் பொருள் அத்தகைய பயங்கரமான நோய் பயங்கரமான செயல்களில் இருந்து கூட சிலவேலைகளில் தப்பி விடலாம் ஆனால் எயிட்ஸில் இருந்து யாருமே தப்பி பயணங்கவாத செயல்களினால் ஏற்படும் பயங்கரவாதத்தை விட மிகப் பயங்கரமானது எயிட்ஸின் தாக்கம் நாகத்தின் நஞ்சிலிருந்து தப்பலாம் துப்பாக்கி ரைவையில் இருந்து தப்பலாம் எம் மண்ணில் கோரத்தாண்டவம் ஆடிய இறுதிக்கட்ட யுத்தத்தின் பிடியில் இருந்து கூட லட்சக்கணக்கிலானவர்கள் உயிர் பிழைத்துள்ளனர் ஆனால் எயிட்ஸில் இருந்து யாருமே தப்ப முடியாது போர் ஒன்று முடிந்து விட்டது என்று எவ்வளவு தூரம் அனந்தப்பட்டவர்கள் எல்லாம் இன்றை மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கும் கலாச்சாரம் பிறப்புக்களைப் பார்த்து மனம் வெதும்பும் நிலையே உள்ளது இத்தகைய மாறிவரும் வந்து கொண்டிருக்கக் கூடிய ஆபத்தான விளைவுகளையும் சம்பவங்களையும் வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பது எம்மை நாமே அளித்து எமக்காகவுமி எம் உறவுக்காகவும் இறப்பதற்கு முதலே புதை குழி ஒன்றை வெட்டி வைக்கும் நிலைமைக்கு ஒப்பானதாகும். இதற்கு பாடசாலைகள், பொது அமைப்புக்கள் மற்றும் வைத்திய சாலைகள் பொத மக்கள் கூடும் இடங்கள் என்று வழிப்பு
ணுர்வுப் பிரச்சினைகளை மேற்கொள்வதன் மூலம் நிறையப் பயன் அடைய முடியும் எயிட்ஸ் என்று சொல்லப்படுகின்ற உயிர் கொல்லி

நோய் பாலியல் நடைவடிக்கைகளினால் மட்டுமே ஒருவருக்கு ஒருவா் என்கின்ற நிலையில் தொற்றிச் செல்கின்றது. என்கின்ற உண்மையை அவா்களுக்கு விளங்க வைக்க வேண்டும் ஏனைய நோய்களுக்கு மருந்துகள் இருக்கின்ற போதிலும் இந்த உயிா் கொல்ல எயிட்சுக்கு இதுவரை நோயை குணமாக் கூடிய மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை என்கின்ற உண்மையை மக்களுக்கு தெரிவு படுத்த வேண்டும். போரின் போரப் பிடியில் சிக்கி கணவன்மாரை இழந்துள்ள ஆயிரம் ஆயிரம் விதவைகள் உள்ளனா் இவா்களில் 18,20,22 வயதுகைளிலும் விதவைகள் இருக்கின்றனா் இந்த வயதில் விதவைகள் என்ற செயலை நினைத்துப் பாா்க்க நெஞ்சு வலிக்கின்றது இவா்கள் கலாச்சாரப் பிறழ்வுகளில் ஈடுபடாமல் இருக்கும் வகையில் வெள்ளம் வரும் முன் என்பதற்கு அமைவாக என்ற நடவடிக்கை எடுப்பதுடன் இளைஞா்கள் இவா்களுக்கு மறுவாழ்வு கொடுக்க முன் வர வேண்டும் மனிதாபிமான நடைவடிக்கையாக இளைஞா்கள் கருதி செல்வாா்கன் ஆனால் யாழ் குடா நாடு எதிா்கொள்ளக் கூடிய பாரிய சமூக சீரழிவுகளை முளையிலே கிளன்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன் எதிா்காலத்தில் எயிட்ஸினை எதிா்கொள்ளக்கூடிய சபால்களில் இதுவும் ஒன்றாக கருத முடியும் எம்மை நோக்கி வந்து கொண்டிருக்க்கூடிய ஆபத்துக்களை எதிா்கொள்வதற்கான சபால்களை எதிா்கொண்டு வெற்றி பெறுவதே எமக்கு இருக்கும் ஒரே வழியாக இருக்கின்றது.

எச்.ஐ.வி என்ற எயிட்ஸினை எமக்கு கிட்ட நெருங்க விடாது தடுப்பது அவசியம், அதற்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வே சிறப்பானதாக அமையும் தெரியாத, அநறிமுகம் இல்லாதவா்களுடன் பாலியல் உறவினைத் தவித்தல் அவசியம் போதைப் பொருள் பாவனைணை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும், இணையத்தளமி மூலம் ஓலரிப் படமாக பெறக்கூடிய அபாசப்படங்களையும், கைத்தொலைபேசி மூவம் பாா்க்கக் கூடிய படங்களையும் தடை செய்ய வேண்டும், இள வயதினரிடையே அதிகரித்துச் செல்லும் காமக்கிளச்சியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், அவா்களுக்கு போதிய விளக்கம் அளித்து, நல்வழிப்படுத்தி சமூக மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

மலைக்கி முலை முலைகொண்டு வரும் விபச்சார விடுதிகளை தடை செய்யவும் கண்டு பிடித்து சட்டத்த முன் நிறுத்துவதும் அவசியமானது மட்டுமல்ல காலத்தின் கட்டா தேவையும் கூட விபச்சரிகளுக்கு மறுவாழ்வு கொடுத்து மன்னித்து சமுகத்தில் வாழக்கூடிய வழிகளை உருவாக்கி கொடுத்தால் அவசியமானது எயிட்சினால் உருவாக்கக் கூடிய கொடுமைகளையும் இறப்புகளையும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணா்வு நடவடிக்கையில் மேற்கொள்ளுதல் மிகமிக அவசியம் வெளிநாடுகளில் இருந்த இலங்கைக்கு காலடி எடுத்து வைப்பவா்களுக்கு விமான நிலையத்தில் வைத்தே குருதிப்பரிசோதனை செய்யப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி சட்டமாக்க வேண்டும்.

ஒரு காலத்தில் யாழ் குடாநாட்டின் கலாச்சாரம் உண்ணத நிலையில் இருந்தது, எமது கலாச்சார பண்பாட்டினை வியந்து போற்றினாா்கள், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் மகோன்னத வாழ்கை நடாத்தியவா்கள் எம்மவா்கள், திருமணம் ஆகாத பெண்கள் ஆண்களுடன் நேரெதிரே நின்று பேசுவதற்கு நாணும் அளவுக்கு இறுக்கமான குடும்ப சூழலை பிரதிபலக்கும் உயா் பண்பாடு தமிழரின் விழுமியத்தை பாதுகாப்பாக ஒவ்வொரு செயற்பாட்டிலும் கலாச்சார அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தது.

எனவே தான் ஒரு இனத்தின் ஆணி வேறாக அவ் இனத்தின் கலாச்சாரம் திகழ்கின்றது, கலாச்சாரம் பண்பாட்டில் அழிவுகள் சிதைவுகள் ஏற்படும் இடத்து அவ் இணத்தின் அழிவென்பது தவிா்க்க முடியாததாகிவிடும் எனவெ எம் இணத்தின் அழிவுகளுக்கு நாமும் கோடாரிக்காம்புகளாகவும், பாத்திரவாளிகளாகவும் இருக்க போகின்றோமா? சிந்திப்போம்! சேயற்படுவோம்”

(முற்றும்)

website http://www.jaffnahealth.org